நாள்.16.02.2026
அசல் வழக்கு எண். 17/2018
பி.வா. சா.1
பெயர். செல்வராஜ்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

வழக்கு சொத்து புல எண் 1118 ஏ/9 என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி சொத்து வாதியின் தந்தைக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதியின் தந்தைக்கு சர்வே எண் 1118 பி பாத்தியப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியும். சர்வே எண் 1118 பி சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் ஒரே காம்பவுண்டிற்குள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் வாதியின் சகோதரர்களின் வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

மேற்படி காம்பவுண்ட்டிற்குள் 5 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சர்வே 1118 ஏ/9 ல் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். சர்வே எண் 1118 ஏ/9 பொறுத்து தீர்ப்பு வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது என்றால் சரிதான். சர்வே 1118 ஏ/9 க்கு மேற்கு பக்கம் தான் சர்வே எண் 1118 ஏ/8 மற்றும் 7 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 1118 ஏ/7,8 சம்மந்தமாக எந்த ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல சர்வே எண் 1118 ஏ/6,7 தாக்கல் செய்துள்ளேன். இந்தவ ழக்கில் எனது தரப்பில் 2 ஆவணங்களும் ஒரு தீர்ப்புரையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ 1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் வாதியின் தந்தை மாடன் தொடர்ப்புடையது என்றால் சரிதான். இந்த வழக்கில் 2ம் பரிகாரமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆக்கிரமிப்பு உள்ளதா என்பதை கண்டறிய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை படித்து பார்த்தேனாஎன்றால் படித்து பார்க்கவில்லை. சர்வே எண் 1118 ஏ விற்கு வடக்கு சர்வே 1125 உள்ளது என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் சர்வே 1125 வடக்கு சுருங்கியும் தெற்கு 2.24 மீட்டர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரத்தை வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. ஆணையர்

இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்த பிறகு தான் அளவீடு செய்தார் என்றால் சரிதான்.

இயற்கை நீதிக்கு உட்பட்டு ஆணையர் அறிக்கைதாக்கல் செய்துள்ளதால் 2 ம் தபசில் ஆக்கிரமிப்பை நான் அகற்றி தரவேண்டும் என்றால் சரியல்ல. முந்தைய வழக்கில் 3/2007 தற்போதைய வாதிக்கு எதிராக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரி. எனது குடும்பத்திற்கும் வாதி குடும்பத்திற்கும் ஆகாது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 3/2007 க்கு எதிராக மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் வாதி கேட்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.